## எகிப்திய கலை

01) நைல்நதியின் கொடை என எதனை வர்ணிக்கின்றனர்?
எகிப்து
02) எகிப்திய நாகரிகத்தின் காலப்பகுதியைக் குறிப்பிடுக?
கி.மு 3000- கிமு 30 வரை
03) எகிப்திய வரலாற்றை எத்தனை காலகட்டங்களாக பிரிக்காலாம்
பழைய இராச்சியம் Old kingdom
மத்திய இராச்சியம் Middle kingciom
புதிய இராச்சியம் New kingdom
04) எகிப்தியர்கள் மன்னரை எவ்வாறு அழைத்தனர்?
பாரோ Pharaoh
05) எகிப்தியர்கள் எக்கலைகளில் பிரசித்தி பெற்றிருந்தனர்?
கட்டிட நிர்மாணங்கள், சிற்பம், ஓவியம்
06) எகிப்தில் பாரிய கட்டிடங்கள் சிறப்பாக அமைய மூலகாரணமாக இருந்தது எது?
சமய நம்பிக்கைகளும் இறப்பின் பின் மறுவாழ்வும்
07) எகிப்திய இராச்சியத்தின் சில நகரங்களின் பெயர்களைத்தருக?
அமர்ணா, கீசா,தேபஸ், மெம்பிஸ்
08) உலகின் மிகப்பெரிய கல்லறை என எதனை வர்ணிக்கின்றனர்?
பிரமிட்டுக்களை
09) எகிப்திய தெய்வங்களின் பெயர்களைத் தருக?
ஓசிரிஸ் (Osiris)
இஸிஸ் (Isis)
ஹோரஸ் (Horus)
செத் (Seth)
10) எகிப்தியர் சூரியக்கடவுகளை எவ்வாறு அழைப்பர்?
Ra. ரா
11) எகிப்திய மன்னர்களின் பெயர்களைத் தருக?
துடன்காமம்,அக்நாட்டான்,ராம்செஸ்,கூபூ,கம்றே
12) எகிப்தை ஆண்ட பிரபல்யமான அரசிகளின் பெயர்களைத்தருக?
கிளியோபாட்ரா,நெபற்றி,கற்செப்ரஸ்
13) எகிப்தியர் வணங்கிய முக்கிய இரு மிருகங்களின் பெயர்களைத்தருக?
நாய்,பூனை
14) எகிப்தியர்களால் வடிவமைக்கப்பட்ட சிற்பங்கள் சிலவற்றைத்தருக
ஸ்பிங்ஸ் Sphink
எழுத்தாளர் Scriber
நெபிற்றி Neferiti
ராம்செய் Ramesess
கப்ரே Cafre
15) Great phinx சிற்பம் எக்காலப்பகுதியை சேர்ந்தது?
2440 காலப்பகுதியை சேர்ந்தது
16) இது எங்கே அமைந்துள்ளது? இதன் அளவு என்ன?
கூடகூட பிரமிட்டுக்கு முன்னால் உள்ளது
64 அடி உயரமும் 240 அடி நீளமும் கொண்டது.
17) ஸ்பிங்கஸ் எதனை விளக்குகிறது?
பாறோ மன்னர்களின் வலிமையையும் பாதுகாப்பையும்
18) இதன் அமைப்பு எவ்வாறு காணப்படுகிறது?
சிங்கத்தின் உடலையும் மனிதத்தலையையும்

19) ஸ்கிறைப்($Scriber$) என்பவர் யார்?
ஆவணப்பதிவாளர்
20) ஸ்கிறைப் சிற்பம் எவ்வூடகத்தால் ஆனது?
மரத்தினால் ஆனது
21) இதன் பீடம் எவ்வாறு காணப்படுகிறது?
சுண்ணக்கல்லால் அமைந்த முக்கோண வடிவில்
22) இச்சிற்பத்திலுள்ள கண்கள் எவ்வூடகத்தால் ஆனது?
பளிங்கு கற்கலால்
23) ஸ்கிறைப் சிற்பத்தின் காலப்பகுதியை குறிப்பிடுக
கி.மு. 2600-2350
24) இச்சிற்பம் எப்பிரதேசத்திலிருந்து கண்டெடுக்கப்பட்டது?
சகாரா பிரதேசம்
25) தற்போது இச்சிற்பம் எப்பிரதேசத்திலுள்ளது?
பிரான்சிலுள்ள லூவர் நூதனசாலை
26) இவ்வோவியத்தின் பின்னணியில் காணப்படுபவை எவை?
பல்வேறு வகையான பறவைகள்
பூனை பயிரஸ் செடிகள்
மீன்கள்
ஹைரொக்லிபிக்ஸ் எழுத்துக்கள்
தாமரை மலர்கள்
27) இவ்வோவியத்தில் எவ்வகையான வர்ணங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன
மஞ்சள்,சிவப்பு,வெள்ளை,கறுப்பு
28) $Boomereny$ என்பது யாது?
வேட்டையாடுவதற்கு பயன்படும் வளைதடி
29) எகிப்தியர்கள் எழுதுவதற்கு எவ்வகைப் புல்லைப்பயன்படுத்தினர்
பபிறஸ் எனப்படும் நாணற்புற்கள்

30) நெபற்றி இராணியின் சிற்பம் எந்தயுகத்தை சேர்ந்தது?
அமர்ணா யுகம் (புதிய இராசதானி காலம் -கி.மு 1375)
31) நெபற்றி சிற்பம் தற்போது எங்குள்ளது?
பேர்ளின் அருங்காட்சியகம்
32) இச்சிற்பம் எவ்வாறமைந்துள்ளது?
தோள்பட்டைக்கு மேல் முழுப்புடைப்பு சிற்பமாக காணப்படுகிறது
33) இச்சிற்பம் எவ்வூடகத்தால் ஆனது?
சுண்ணக்கல்
34) நெபற்றி இராணி யாருடைய மனைவி என கருதப்படுகிறது?
அக்நெதறான் மன்னனுடைய மனைவி
35) பேரரசியின் வலிமையை இச்சிற்பம் எவ்வாறு காட்டுகிறது
தலையில் உயரமான மகுடமும் கழுத்தில் மாலையும்
36) இச்சிற்பத்தின் உயரத்தைக் குறிப்பிடுக?
20 ங்குலம்
37) எகிப்திய ஓவியங்களை எங்கு காணலாம்?
பிரமிட்டுகள், தேவாலயங்கள், குகைக்கோயில் ($Rockcut\ temple$)38)
38) எகிப்திய ஓவியங்களின் சிறப்பினை குறிப்பிடுக?
- இருபரிமாணத்தன்மையுடையவை
- பக்கப்பார்வை உடையவை
- தட்டையான தன்மை
- புறஉருவக் கோடுகள்(out line)
- வைரறொக்லிமிக்ஸ் எனும் அட்சர எழுத்துக்கள் ஓவியத்தின் பின்னணியை நிரப்புவதற்கு காணப்படல்.

39) எகிப்திய ஓவியங்கள் எவ்வகையான நிகழ்வுகளை உள்ளடக்கியதாக காணப்படுகிறது.

- சமய வழிபாடு சார்ந்த ஓவியங்கள்
- மரணச்சடங்கு சார்ந்த ஓவியங்கள்
- விவசாயம் சார்ந்த ஓவியங்கள்
- ஆடல்,பாடல்கள் சார்ந்த ஓவியங்கள்
- வேட்டையாடல்,பொழுதுபோக்கு, விளையாட்டு சார்ந்த ஓவியம்

40) ஹைரொகிலிபிக்ஸ் என்பது யாது?
உருவ அட்சரங்கள் (எழுத்துக்களின் முதலாவது கட்டம்)

41) ஹைரொக்லிபிக்ஸ் எவ்வாறான இடங்களில் காணலாம்?
சுவரோவியங்கள், சிற்பங்களின் பின்னணியில் காணலாம்

42) மீடம் வாத்துக்கள் *Gees of meidum* எனும் ஓவியங்கள் எக்காலப்பகுதியை சேர்ந்தவை?
கி.மு 2630 ஐச் சேர்ந்தவை

43) இவ்வோவியம் எங்கிருந்து பெறப்பட்டது?
மீடம் எனும் இடத்திலமைந்த மஸ்டாபரவிலிருந்து

44) இவ்வோவியத்தின் சிறப்பியல்புகளை குறிப்பிடுக?

- இவ்வோவியத்தில் 6 வாத்துகள் காணப்படுகின்றன
- இவை மூன்று சோடியாக எதிரெதிர் திசையைப்பார்த்த வண்ணம் வரையப்பட்டுள்ளன.
- இவ்வோவியத்தில் கறுப்பு வெள்ளை கபில நிறங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் எகிப்தின் இப்பாரம்பரிய மரபுவழி ஓவியத்திலிருந்து சற்று மாறுபட்டவகையில் முப்பரிமாணத்தன்மையுடன் காணப்படுகின்றன
- கோடுகள் மூலம் நுணுக்கமாகவும் விரிவாகவும் வடிவங்கள் தெளிவாக காட்டப்பட்டுள்ளன.

45) பறவை வேட்டை எனும் ஓவியம் எக்காலப்பகுதியை சேர்ந்தது
கி.மு 1580-1350 இடைப்பட்ட காலம்

46) இவ்வோவியம் எங்கிருந்து பெறப்பட்டது?
திபஸ்ஸில் நெபாமுன் கல்லறையிலிருந்து பெறப்பட்டது

47) இவ்வோவியம் எதனை விபரிக்கிறது?
பிரபு நெபாடுன் படகிலேறி வேட்டையாடும் காட்சியை விபரிக்கிறது.

48) இவ்வோவியம் வரையப்பட்ட முறையைக் குறிப்பிடுக?
பிரஸ்கோ சிக்கோ நுட்பமுறையில் வரையப்பட்டது

49) இது தற்போது எங்குள்ளது?
லண்டனிலுள்ள பிரித்தானிய அரும்பொருட் காட்சியகம்

50) இவ்வோவியத்தில் காணப்படும் வேறு இரு மனித உருவங்களுடயவர் யார் என கருதப்படுகிறது?
பிரபுவின் மனைவியும் மகளும்



1



2



3



4



5

**கிரேக்க கலை**



1. சிலையின் பெயரைக் குறிப்பிடுக.
   வீனஸ்தி மெலோ
2. இச்சிலை தற்போது எங்கு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது?
   பிரான்ஸ் நாட்டிலுள்ள லூவர் அருங்காட்சியகத்தில்
3. இச்சிலை எங்கிருந்து பெறப்பட்டது?
   மேலோ தீவில் கி.பி 1820
4. இச்சிலை பற்றி விமர்சகரின் கருத்தைக் குறிப்பிடுக
   இடதுகையில் ஏந்திய கண்ணாடியில் தனது உடலழகை பார்க்கும் ஒரு பெண் என்பதாகும்.
5. இச்சிலையை வடிவமைத்த கலைஞரின் பெயரைக்குறிப்பிடுக
   அன்ரிசொவ்

**பருதிவட்டம் எறிபவன் (*Discobolus*)**



1. இச்சிற்பம் எதனைப் பிரதிபலிக்கிறது?
   பருதிவட்டம் எறிய ஆயத்தமாகும் ஒரு விளையாட்டு வீரனைக் காட்டுகிறது
2. இச்சிலை எவ்வூடகத்தால் ஆனது?
   சலவைக்கல்
3. இச்சிலை எக்காலப்பகுதியைச் சேர்ந்தது?
   கி.மு 1450
4. இதனை உருவாக்கிய சிற்பியின் பெயர் என்ன?
   Myron
5. இச்சிலையின் சிறப்பியல்பை குறிப்பிடுக?
   ஆணின் உடல் வலிமை
   வலுவான அசைவு
   உடலினி சமநிலை,சந்தம் போன்றன மிகச்சிறப்பாக இச்சிலையில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

**ஹேர்மிசும் டவோனீசும்**



1) இச்சிலை எக்காலப்பகுதியைச் சேர்ந்தது?
   கி.மு 330-320
2) இச்சிலை எங்கிருந்து கண்டுபிடிக்கப்பட்டது?
   கிரேக்கநாட்டின் ஒலிம்பியாவிலிருந்து
3) இச்சிற்பம் எவ்வகையைச் சார்ந்தது?
   முழுப்புடைப்பு சிற்பவகையைச் சார்ந்தது
4) இச்சிற்பத்தை வடிவமைத்த சிற்பியின் பெயரைக் குறிப்பிடுக?
   பிரெக்சிடேல்ஸ் (*Praxiteles*)

5) இச்சிற்பம் எவ்வூடகத்தால் ஆனது? அதன் அளவுப்பிரமாணத்தை குறிப்பிடுக?
   சலவைக்கல்லில் ஆனது
   7அடி 1அங்குலம்
6) இச்சிலையின் தோற்றப்பாட்டை குறிப்பிடுக
   ஹேரமிஸ் சிலையானது வலது காலை ஊன்றி இடதுகால் முழங்காலை மடித்து வைத்திருப்பதோடு கையில் டயோன்சஸ் எனும் குழந்தையை தூக்கி வைத்திருப்பது போன்று தோற்றமளிக்கிறது
7) இச்சிலையின் வலதுகை எதனை வைத்திருப்பதாக ஆராய்ச்சியினர்கள் ஊகிக்கின்றனர்?
   திராட்சைப் பழங்களை வைத்திருப்பதாக ஊகிக்கின்றனர்
8) இச்சிலையின் சமநிலை எவ்வாறு பேணப்பட்டுள்ளது?
   இடது கையிலுள்ள துணி காரணமாக இச்சிற்பத்தின் சமநிலை பேணப்பட்டுள்ளது.

**அதினா தேவதை**



1) சிற்பம் எத்தனையாம் நூற்றாண்டைச் சேர்ந்தது?
   கி.மு. 5ஆம் நூற்றாண்டு
2) வடிவமைத்த கலைஞன் யார்?
   பீடியஸ் (Phidias )
3) இதன் காலப்பகுதி யாது?
   தொன்மை யுகம்
4) இச்சிலையின உயரம் யாது?
   48 அடி
5) இதன் ஊடகம் யாது?
   ஓர் மரத்தில் செதுக்கப்பட்டு தங்கத்தினாலும், யானைத் தந்தத்தினாலும் கவசமிடப்பட்டுள்ள அதீனா தேவதையின் உருவம் மிகச் சிறப்பானதொன்றாகும்.
   இதன் கைகளில் காணப்படுவன எவை?
   இடது கையில் ஓர் ஈட்டியையும் ஒரு கேடயத்தையும் தாங்கியுள்ளது.
   வலது உள்ளங்கையில் நைக் (nike) அதாவது வெற்றி என்பதை குறியீடாகக் காட்டும் பண்டைய கிரேக்கத் தேவதையின் உரு காணப்படுகின்றது.

6) இச்சிலையின் உணர்வு யாது?
   அதீனா தேவதை உருவத்தின் மூலம் வலிமை, போர், வீரத்துவம் (நிமிர்ந்த நிலை) பெண்ணுக்குரிய நளினம் போன்ற இயல்புகள் நன்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

**லவகூன் சிற்ப்பம் (Laocoon )**

கி.மு 5ம் நூற்றாண்டுக்குரிய இச் சிலை (1) **லவகூன்** ஆகும். (2) **பாற்கல்** ஊடகத்தினால் நிர்மாணிக்கப்பட்டது. கடற்பாம்பு ஒன்றுடன் தர்க்கம் புரியும் தந்தையும் இரு (3) **புதல்வர்களும்** சித்தரிக்கப்பட்டுள்ளது. முகத்தில் (4) **திகில், பயம், வேதனை** ஆகிய உணர்வுகளும் பாம்பில் இருந்து விடுபடுவதற்கான முயற்சியும் சிறப்பாக காட்டப்பட்டுள்ளது. (5) **8 அடி** உயரம் உடைய இச்சிற்பம் தற்போது உரோமிலுள்ள (6) **உரோமபுரியில் வத்திக்கான்** தொல்பொருள் காட்சிச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

